بِسۡمِ اللّٰہِ الرَّحۡمٰنِ الرَّحِیۡمِ

**ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுஅல்லாஹுத் தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் 22/12/2023 அன்று U.K - இஸ்லாமாபாதிலுள்ள முபாரக் பள்ளிவாசலில் ஆற்றிய ஜுமுஆ பேருரையின் சுருக்கம்**

**✪ உஹுது போரின் நிலைமைகள் மற்றும் நிகழ்வுகள் பற்றிய குறிப்பு**
**✪ பாலஸ்தீனத்து அப்பாவிகளுக்காக துஆவிற்கான தொடர் வலியுறுத்தல்**

أَشْهَدُ أَنْ لَّآ إِلٰهَ إِلَّا اللّٰهُ وَحْدَهٗ لَا شَرِيْكَ لَهٗ وَأَشْهَدُ أَنَّ مُحَمَّدًا عَبْدُهٗ وَرَسُوْلُهٗ۔ أَمَّا بَعْدُ فَأَعُوْذُ بِاللّٰهِ مِنَ الشَّيْطٰنِ الرَّجِيْمِ۔

بِسۡمِ اللّٰہِ الرَّحۡمٰنِ الرَّحِیۡمِ ۝۱ اَلۡحَمۡدُ لِلّٰہِ رَبِّ الۡعٰلَمِیۡنَ ۝۲ الرَّحۡمٰنِ الرَّحِیۡمِ ۝۳ مٰلِکِ یَوۡمِ الدِّیۡنِ ۝۴

اِیَّاکَ نَعۡبُدُ وَ اِیَّاکَ نَسۡتَعِیۡنُ ۝۵ اِہۡدِنَا الصِّرَاطَ الۡمُسۡتَقِیۡمَ ۝۶ صِرَاطَ الَّذِیۡنَ اَنۡعَمۡتَ عَلَیۡہِمۡ ۬ۙ غَیۡرِ الۡمَغۡضُوۡبِ عَلَیۡہِمۡ وَ لَا الضَّآلِّیۡنَ ۝۷

இன்றைய தினங்களில் குத்பாவில் உஹுது போர் பற்றி கூறப்பட்டு வருகிறது. இதற்கு முன்னர் கூறப்பட்டது போன்று, முஸ்லிம்கள் பொதுவான போரில் நிராகரிப்பாளர்களுக்குக் கடும் இழப்பை ஏற்படுத்தினார்கள். அதனால் அவர்கள் ஓட வேண்டிய நிர்பந்தத்திற்கு ஆளானார்கள். ஆனால், ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் வலியுறுத்திக் கூறப்பட்ட கட்டளையிருந்தும் குன்றின் பாதுகாப்பிற்காக நியமிக்கப்பட்டிருந்தவர்களில் பெரும்பாலார் குன்றை காலி செய்து விட்டதனால், எதிரிகள் அந்தப் பக்கத்தில் இருந்து தாக்குதல் தொடுத்து முஸ்லிம்களுக்குக் கடும் இழப்பை ஏற்படுத்தி விட்டார்கள்.

இதன் விபரம் இவ்வாறு வருகிறது: இணைவைப்பாளர்களின் கொடியை ஏந்துபவர்கள் ஒவ்வொருவராக கொல்லப்பட்டதும் அவர்கள் புறமுதுகிட்டு ஓடத் துவங்கினர். முஸ்லிம்கள் எதிரிகளை ஓடக் கண்டதும், அவர்களைப் பின்தொடர்வதிலும் போர்ச் செல்வங்களைத் திரட்டுவதிலும் மூழ்கி விட்டார்கள். அந்த நேரத்திலேயே, ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் மலைக்குன்றின் மீது நியமித்திருந்த, 'எந்த சூழ்நிலையிலும் உங்கள் இடத்தை விட்டு நகரக்கூடாது' என்று கட்டளையிட்டிருந்த, வில் வீரர்களின் படை போர்ச் செல்வங்களைத் திரட்டுவதற்காகத் தனது இடத்தை விட்டு ஓடிச் சென்றதாகக் கூறப்படுகிறது.

ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் அமீராக நியமித்திருந்த ஹஸ்ரத் அப்துல்லாஹ் பின் ஜுபைர் (ரலி) அவர்கள் அந்த மக்களைத் தடுத்தார்கள். ஆனால், அவர்கள் நிற்கவில்லை. ஹஸ்ரத் அப்துல்லாஹ் பின் ஜுபைர் (ரலி) அவர்களுடன் பத்துக்கும் குறைவான சஹாபா தங்களது இடத்திலேயே உறுதியாக நின்று கொண்டிருந்தார்கள். பெரும்பாலான வரலாற்றாசிரியர்களும் வாழ்க்கை வரலாறு எழுதுபவர்களும் மலைக்குன்றை விட்டுச் சென்ற சஹாபாவைப் பற்றி குறிப்பிடுகையில், 'அவர்கள் போர்ச்

செல்வங்களைத் திரட்டுவதற்காக அவசரப்பட்டார்கள்' என்றே எழுதியுள்ளார்கள். இவ்வாறே, திருக்குர்ஆன் விரிவுரையாளர்களும் அதிகாரம் ஆல இம்ரானின் 153 ஆவது வசனத்தின் விளக்கவுரையில், 'சஹாபா (ரிஸ்வானுல்லாஹி அலைஹிம் அஜ்மயீன்) போர்ச் செல்வங்களைப் பெறுவதற்காக விரைந்து செல்ல விரும்பினர்' என்றே எழுதியுள்ளார்கள். ஆனால், சஹாபா பெருமக்களைப் பற்றி அவர்கள் இந்த உலக ஆசைக்காக குன்றை விட்டுச் சென்றார்கள் என்ற விஷயத்தை மனம் ஏற்கவில்லை.

அவர்களுக்குப் போர்ச் செல்வங்களைப் பற்றிய கவலை இருந்ததாக சஹாபாவைப் பற்றி கூறுவது அல்லது நினைப்பதுகூட அவர்களது மேன்மைக்கு எதிரானதாகும். அவர்களோ தங்களுடைய மனைவி மக்கள், தங்களுடைய செல்வங்கள் மற்றும் தங்களுடைய உயிரைக் கூட ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களுக்காக அர்ப்பணித்து விட்டிருந்தார்கள். வெற்றிபெரும் நிலையில், போர்ச் செல்வம் கிடைத்து விடுவது ஒரு கூடுதல் விஷயமாக வேண்டுமானால் இருக்கலாம்; ஆனால், சஹாபாவின் நோக்கமும் குறிக்கோளும் போர்ச் செல்வமாக ஒருபோதும் இருக்க முடியாது.

முஸ்லிம்களுக்கு நிராகரிப்பாளர்கள் மீது தெளிவான வெற்றி கிடைத்து விட்டது; இப்பொழுது முஸ்லிம்கள் நிராகரிப்பாளர்களை விரட்டியடிக்கிறார்கள் என்பதைக் குன்றில் இருந்த சஹாபிகள் பார்த்த போது, இந்த சஹாபிகளும் போரின் வெற்றியின் மகிழ்ச்சியைக் கொண்டாடுவதில் கலந்து கொள்வதற்காக நிம்மதியிழந்து விட்டார்கள். 'நம்முடைய சகோதரர்களோ போரில் நேரடியாக கலந்து கொள்கிறார்கள். நாம் இங்கு குன்றில் நின்று கொண்டிருக்கிறோமே!' என்று அவர்கள் நினைத்திருக்கலாம். எனவே, போரின் கடைசி நொடிப் பொழுதுகளில் அவர்களும் செயல் ரீதியான போரில் கலந்து கொள்வதற்காக, வெற்றியின் மகிழ்ச்சியைக் கொண்டாடுவதில் கலந்து கொள்வதற்காக குன்றை விட்டுவிட்டு போர்க்களத்திற்கு வந்திருக்கலாம்.

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூத் (ரலி) அவர்களும் அதிகாரம் ஆல இம்ரானின் 153 ஆவது வசனத்தின் விளக்கவுரையில் இது தொடர்பாக ஒரு விளக்கமான குறிப்பை எழுதினார்கள். அது வெளியிடப்படவில்லை. அன்னார் கூறுகிறார்கள்: அசல் விஷயம் என்னவென்றால், குன்றில் நியமிக்கப்பட்டிருந்த சஹாபாவுக்கும் நாமும் இந்த உஹுது போரில் கலந்து கொள்ள வேண்டும் என்ற ஆசை இருந்தது. இதுவும் ஓர் உலக சிந்தனையாக இருந்தது. ஏனெனில், நாம் போரில் நேரடியாக கலந்து கொள்ளவில்லை என்று அவர்கள் கருதிக் கொண்டிருந்தார்கள். ஆனால், அவர்களுக்கோ ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களுக்குக் கட்டுப்பட வேண்டும் என்ற கட்டளை இருந்தது. அல்லாஹ் கூறுகிறான்: உங்களுடைய அதிகாரியும் அவருடைய தோழர்களும் மறுமையை நாடினார்கள். இறுதி முடிவும் விளைவும் அவர்கள் கண் முன் இருந்தது. இதன் விளைவு நல்லதாக அமையாது என்பதை அவர்கள் அறிந்திருந்தார்கள். அதற்கு நேர்மாறாக உங்களுடைய பார்வை மேலோட்டமாக இருந்தது. இவ்வாறு பொருள் கொடுப்பது, சஹாபாவின்

பணிகள் மற்றும் அவர்களுடைய தியாகங்கள் ஆகியவற்றிலிருந்து வெளிப்படக்கூடிய அந்த மேன்மைக்குப் பொருத்தமானதாகும்.

ஹஸ்ரத் நான்காவது கலீஃபத்துல் மஸீஹ் (ரஹி) அவர்கள் கூறுகிறார்கள்: இங்கு உலகம் என்பதற்கு எவர்கள் எல்லாம் பொருள்களை சூறையாடுதல், போர்ச் செல்வங்கள் என்று பொருள் கொள்கிறார்களோ இது சரியானதல்ல. அவர்கள் தற்காலிக வெற்றியைப் பார்த்துக் கொண்டிருந்தார்கள். இங்கு உலகம் என்பதற்குப் பொருள் என்னவென்றால், முதலில் வெளிப்பட்டு விட்டிருந்த அந்த விவகாரத்தின் (அதாவது, வெற்றியின்) மீது அவர்களது பார்வை இருந்தது. ஆனால், ஹஸ்ரத் அப்துல்லாஹ் பின் ஜுபைர் (ரலி) அவர்களின் பார்வையோ மறுமை மீது இருந்தது. அதாவது, அவர்கள் கண்ணியத்திற்குரிய தூதர் (ஸல்) அவர்களுக்குக் கட்டுப்படுவதில் எல்லாவற்றையும் விடப் பெரிய வெற்றியைப் பார்த்தார்கள்.

எவ்வாறு இருப்பினும், மலைக்குன்று காலியாகி விட்டது. ஹஸ்ரத் அப்துல்லாஹ் பின் ஜுபைர் (ரலி) விரல் விட்டு எண்ணக்கூடிய அளவிலான தம்முடைய சில தோழர்களுடன் அங்கு இருந்து விட்டார்கள். தப்பி ஓடிய மக்கத்து காஃபிர்களின் படையில், அப்பொழுது வரை ஈமான் கொண்டிருக்காத காலித் பின் வலீத் அவர்கள் குன்றை காலியாக இருக்கக் கண்டு இக்ரிமா பின் அபீ ஜஹ்லை உடன் அழைத்துக் கொண்டு குதிரைப் படையுடன் அந்த மலைக் குன்றின் மீது தாக்குதல் தொடுத்து விட்டார்கள். காஃபிர்களின் இந்தத் தாக்குதல் எந்த அளவுக்கு பயங்கரமானதாகவும் கடுமையானதாகவும் இருந்தது என்றால், ஒரே தாக்குதலில் குன்றில் நியமிக்கப்பட்டிருந்த சஹாபா ஷஹீது ஆகிவிட்டார்கள். அந்தத் தாக்குதலைப் பற்றி செய்தியறிந்திராத முஸ்லிம்கள் போர்க்களத்தில் போர்ச் செல்வங்களைத் திரட்டுவதிலும் நிராகரிப்பாளர்களை சிறைபிடிப்பதிலும் ஈடுபட்டிருந்தார்கள். அவர்களால் சுதாரித்துக் கொள்ள முடியாமற் போனது. திடீர்த் தாக்குதலால் முஸ்லிம்கள் பிரிந்து போய் விட்டார்கள். போரின் முனை தீடீரென்று மக்கத்து நிராகரிப்பாளர்களுக்கு சாதகமாக திரும்பி விட்டது.

தப்பி ஓடிக் கொண்டிருந்த காஃபிர்களும் இந்தப் புது சூழ்நிலையைக் கண்டு திரும்பி வந்தனர். இவ்வாறு முன்னாலிருந்தும் பின்னாலிருந்தும் நிராகரிப்பாளர்கள் முஸ்லிம்களை சூழ்ந்து கொண்டார்கள். முஸ்லிம்களின் வரிசை நிலைபெற்றிருக்கவில்லை. அவர்கள் போர்ச் செல்வங்களைத் தங்களுடைய கைகளில் இருந்து வீசி விட்டார்கள்.

இந்தப் போரில் ஹஸ்ரத் ஹம்ஸா (ரலி) அவர்களும் ஷஹீது ஆனார்கள். அவர்கள் இரண்டு வாள்களை வைத்து ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு முன்னால் நின்று கொண்டு போர் செய்து கொண்டிருந்தார்கள். அவர்கள் மிகவும் வீரத்துடன் சிலசமயம் முன்னால் செல்வார்கள்; சில சமயம் பின்னால் வருவார்கள். இதற்கிடையிலேயே அவர்கள் திடீரென்று வழுக்கி விழுந்து விட்டார்கள். வஹ்ஷீ அவர்கள் மீது ஈட்டியை எறிந்து அவர்களை ஷஹீது ஆக்கி விட்டார்.

ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மத் சாஹிப் (ரலி) அவர்கள் கூறுகிறார்கள்: ஹஸ்ரத் ஹம்ஸா (ரலி) அவர்கள் ஷஹீதான தகவல் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களுக்குக் கிடைத்தபோது, அதனால் அன்னாருக்குப் பெருந் துயரம் ஏற்பட்டது. அறிவிப்பில் வருகிறது, தாயிஃப் யுத்தத்துக்குப் பிறகு ஹம்ஸா (ரலி) அவர்களைக் கொன்றவர் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு முன்னால் வந்த போது, அன்னார் அவரை மன்னித்து விட்டார்கள்தான்; ஆனால், ஹம்ஸாவின் மீதான அன்பிற்கு மரியாதை கொடுத்தவாறு, 'வஹ்ஷீ எனக்கு முன்னால் வராமல் இருக்கட்டும்' என்று கூறி விட்டார்கள்.

அப்பொழுது வஹ்ஷீ தமது உள்ளத்தில் இவ்வாறு உறுதி எடுத்துக் கொண்டார்: எந்தக் கையால் நான் அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களின் சாச்சாவைக் கொன்றேனோ, அதே கையால் இஸ்லாத்தின் பெரிய எதிரி ஒருவனைக் கொன்று விடாத வரை நான் நிம்மதி அடைய மாட்டேன். ஆக, ஹஸ்ரத் அபூபக்ர் சித்தீக் (ரலி) அவர்களுடைய கிலாஃபத் காலகட்டத்தில் அவர் யமாமா போரில் பொய் நபித்துவ வாதியான முஸைலாமா கஸ்ஸாபைக் கொன்று தனது வாக்குறுதியை நிறைவேற்றினார்.

ஹஸ்ரத் ஹம்ஸா (ரலி) அவர்களுடைய உடல் அவமதிக்கவும் பட்டது. அவர்கள் உடல் கடுமையாக சிதைக்கப்பட்டது. வேதனை தரும் இந்தக் காட்சியைப் பார்த்து கண்ணியத்திற்குரிய தூதர் (ஸல்) அவர்களுக்குப் பெருந் துயரம் ஏற்பட்டது. ஹஸ்ரத் ஹம்ஸா (ரலி) அவர்களின் சகோதரி ஹஸ்ரத் ஸஃபிய்யா (ரலி) அவர்கள் ஒரு வலிமை மிகுந்த பெண்மணியாக இருந்தார்கள். அவர்கள் போர் முடிவில் மிகவும் வேகமாகப் போர்க்களத்தை நோக்கிச் சென்று கொண்டிருந்தார். அந்தப் பெண் முஸ்லிம்களின் சிதைக்கப்பட்ட சடலங்களைப் பார்த்து விட்டிருப்பார். இந்நிலையில் கண்ணியத்திற்குரிய தூதர் (ஸல்) அவர்கள் இந்த வேதனை மிகுந்த காட்சிகளை ஒரு பெண் பார்ப்பதை விரும்பவில்லை. எனவே, அன்னார் அந்த பெண்ணைத் தடுத்து நிறுத்துமாறு கட்டளையிட்டார்கள். ஹஸ்ரத் ஸஃபிய்யா (ரலி) அவர்களைத் தடுத்து நிறுத்துவதற்கு முயற்சி செய்யப்பட்டது. ஆனால், அவர்களைத் தடுத்து நிறுத்த முடியவில்லை. கடைசியில், ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் தான் நீங்கள் இந்த சடலங்களைப் பார்த்து விடக்கூடாது என்று கூறினார்கள் எனக் கூறப்பட்டதும் அவர்கள் நின்று விட்டார்கள். அவர்கள் தம்மிடமிருந்து இரண்டு துணிகளைக் கொடுத்து விட்டு கூறினார்கள்: இதை நான் என் சகோதரர் ஹம்ஸாவுக்காகக் கொண்டு வந்துள்ளேன். ஏனென்றால், அவர்கள் ஷஹீதாகி விட்டார்கள் என்ற தகவல் எனக்குக் கிடைத்து விட்டது.

ஹஸ்ரத் ஸஃபிய்யா (ரலி) அவர்கள் தம் சகோதரர் ஹம்ஸாவின் உடலைப் பார்க்க விரும்பினார்கள். அவர்களுடைய இந்தக் கோரிக்கை ஹுஸூர் (ஸல்) அவர்களின் மேலான பார்வைக்கு முன் வைக்கப்பட்ட போது கண்ணியத்திற்குரிய தூதர் (ஸல்) அவர்கள் அனுமதி வழங்கி விட்டார்கள். ஹஸ்ரத் ஸஃபிய்யா (ரலி) அவர்கள் உடல் சிதைக்கப்பட்டிருந்த

தம் சகோதரரின் சடலத்தைப் பார்த்ததும் உணர்ச்சிப் பெருக்கில் மூழ்கி அவர்களுடைய கண்களில் இருந்து கண்ணீர் வழிந்தோடியது.

*ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் கூறினார்கள்:* போர் பற்றிய மீதி விவரத்தை இனி எடுத்துரைத்பேன். இன் ஷா அல்லாஹ்.

*மேலும், கூறினார்கள்:* நான் பாலஸ்தீனத்து மக்களுக்காக துஆக்கள் செய்யவும் கூறிக் கொண்டே இருக்கிறேன். துஆ செய்யுங்கள். எல்லாம் வல்ல அல்லாஹ் உலகத்துக்கு அநீதிக்கு எதிராக உண்மையான அமலை வெளிப்படுத்துவதற்கு நல்வாய்ப்பு வழங்குவானாக! குரல்களோ சற்று உயரத் துவங்கியுள்ளனதான்; அநீதி இழைக்கப்படுகிறது அநீதி இழைக்கப்படுகிறது என்று பேசவும் செய்கிறார்கள்தான்; ஆனால், எல்லாரும் இஸ்ரவேல் அரசாங்கத்தைப் பார்த்து அஞ்சுவதாகத் தெரிகிறது. அல்லது இயல்பாகவே இந்த கிழக்கத்திய உலகம் முஸ்லிம்களுக்கு எதிரானது. இருக்கும் (அந்த) வெறுப்பு காரணமாக இவர்கள் முஸ்லிம்கள் மீது ஒன்று அநீதி முடிவடையக் கூடாது என்று அல்லது எப்படி முயற்சி செய்யப்பட வேண்டுமோ அப்படி செய்ய வேண்டாம் என்று விரும்புகிறார்கள்.

அப்பாவிக் குழந்தைகள் ஆயிற்றே! பாவப்பட்ட பெண்கள் ஆயிற்றே! அவர்கள் மீது அநீதியிழைக்கப்படுகிறதே! முதியவர்கள் இருக்கிறார்களே என்று பார்ப்பதில்லை. ஆக, எவ்வாறு இருப்பினும், இவர்கள் மீதோ நாம் அதிகம் நம்பிக்கை வைக்க முடியாது. ஆனால், எந்நிலையிலும் முயற்சி செய்து கொண்டேயிருக்க வேண்டும். அவர்களுக்குப் புரிய வைத்துக் கொண்டேயிருக்கவும் வேண்டும். துஆவும் செய்து கொண்டேயிருக்க வேண்டும். எல்லாம் வல்ல அல்லாஹ் முஸ்லிம் நாடுகளுக்கே தங்களுடைய குரல்களில் வலுவை ஏற்படுத்துவதற்கு நல்வாய்ப்பு வழங்குவானாக! உண்மையில், ஒன்றாகி இந்த அநீதிக்கு எதிராகக் குரல் எழுப்புவார்களாக! இதை முடிவுக்குக் கொண்டு வருவதற்கு முயற்சி செய்வார்களாக!

*இதற்குப் பிறகு, ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் இருவருக்கு ஜனாஸா காயிப் தொழவைப்பதாக அறிவிப்பு செய்தவாறு மர்ஹூம்களின் நற்குறிப்பை எடுத்துரைத்தார்கள்.*

**1.** கஸா பகுதியில் வாழ்ந்து வந்த மதிப்பிற்குரிய ஷேக் அஹ்மத் ஹுஸைன் அபூ ஸர்தானா சாஹிப் அவர்கள் ஆவார்கள். கடந்த நாள்களில் கஸாவில் நடைபெற்ற இஸ்ராயீலிய குண்டு வீச்சில் நம்முடைய இந்த அஹ்மதி பெரியவர் ஷஹீதாகி விட்டார்கள். இன்னா லில்லாஹி வ இன்னா இலைஹி ராஜிவூன். மர்ஹூம் இப்பொழுது நடந்து கொண்டிருக்கக்கூடிய போரில் கஸாவில் ஷஹீதான முதல் அஹ்மதி ஆவார்கள்.

மர்ஹூம் அவர்களுக்கு ஏறத்தாழ **94** வயது இருந்தது. மர்ஹூம் அல் அஸ்ஹர் பல்கலைக்கழகத்திலிருந்து தேர்ச்சி பெற்ற அறிஞர்களில் ஒருவர் ஆவார்கள். **1970** இல் மர்ஹூம் அவர்கள் இறைவனின் ஆதிக்கத்தின் கீழ் பைஅத் செய்து அஹ்மதிய்யத்தில் இணைந்து விட்டார்கள்.

மர்ஹூம் எல்லாருக்கும் பிடித்த நபராக, கிலாஃபத்தை மிகவும் நேசிக்கக்கூடியவராக திருக்குர்ஆனுடன் இணைப்பு இருந்த கலப்பற்ற அஹ்மதியாக இருந்தார்கள். இவர்களுக்கு சந்ததிகள் யாரும் இருக்கவில்லை. இவர்களுடன் இருந்த இவர்களுடைய இரண்டாவது துணைவியாரும் இந்தத் தாக்குதலில் காயுமுற்றுள்ளார்கள். எல்லாம் வல்ல அல்லாஹ் இவர்களின் படித்தரத்தை உயர்த்துவானாக! இவர்களின் துணைவியாருக்கும் குணமளிப்பானாக! எல்லாம் வல்ல அல்லாஹ் பாலஸ்தீனர்களுக்காக இவர்கள் செய்த துஆக்களையும் ஏற்றுக் கொள்வானாக! அங்கு அமைதியையும் நிலவச் செய்வானாக! அந்த மக்களுக்கு ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களை ஏற்றுக் கொள்வதற்கும் நல்வாய்ப்பு வழங்குவானாக!

**2.** கென்யாவைச் சேர்ந்த உஸ்மான் அஹ்மத் காகோரியா சாஹிப் அவர்கள் ஆவார்கள். மர்ஹூம் கடந்த நாள்களில் வஃபாத் ஆகி விட்டார்கள். இன்னா லில்லாஹி வ இன்னா இலைஹி ராஜிஊன். மர்ஹூம் அவர்களின் ஜமாஅத் தொண்டின் தொடர் மிகவும் நீளமானது. அது பல பத்தாண்டுகளில் பரவியுள்ளது. பல்வேறு ஜமாஅத் நூல்களை சவாஹீலீ மொழியில் மொழியாக்கம் செய்தார்கள். மர்ஹூம் உன்னதமான நற்பண்புகளுக்கு சொந்தக்காரராகவும், கொள்கையுடையவராகவும், தஹஜ்ஜுத் தொழக்கூடியவராகவும், முறையாக சந்தாக்கள் செலுத்துபவராகவும், முபல்லிக்மார்களுக்கு மிகவும் மரியாதை அளிப்பவராகவும், விருந்தோம்பல் செய்யக்கூடிய நல்ல சான்றோரரகாவும் இருந்தார்கள்.

மர்ஹூம் அவர்களின் சந்ததிகள் அனைவருமே ஏதாவது ஒரு வகையில் ஜமாஅத்துக்குத் தொண்டாற்றுவதற்கான நல்வாய்ப்பைப் பெறுகிறார்கள்.

*ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் மர்ஹூம்களின் பாவமன்னிப்புக்காகவும் உயர்ப்படித்தரங்களுக்காவும் துஆ செய்தார்கள்.*

اَلْحَمْدُ لِلّٰہِ نَحْمَدُہٗ وَنَسْتَعِیْنُہٗ وَنَسْتَغْفِرُہٗ وَنُؤْمِنُ بِہٖ وَنَتَوَکَّلُ عَلَیْہِ وَنَعُوْذُ بِاللّٰہِ مِنْ شُرُوْرِ اَنْفُسِنَا وَمِنْ سَیِّئَاتِ اَعْمَالِنَا مَنْ یَّھْدِہِ اللّٰہُ فَلَا مُضِلَّ لَہٗ وَمَنْ یُّضْلِلْہُ فَلَا ھَادِیَ لَہٗ وَنَشْھَدُ اَنْ لَّآ اِلٰہَ اِلَّا اللّٰہُ وَنَشْھَدُ اَنَّ مُحَمَّدًا عَبْدُہٗ وَرَسُوْلُہٗ، عِبَادَ اللّٰہِ رَحِمَکُمُ اللّٰہُ اِنَّ اللّٰہَ یَاْمُرُ بِالْعَدْلِ وَالْاِحْسَانِ وَاِیْتَآءِ ذِی الْقُرْبٰی وَیَنْھٰی عَنِ الْفَحْشَآءِ وَالْمُنْکَرِ وَالْبَغْیِ یَعِظُکُمْ لَعَلَّکُمْ تَذَکَّرُوْنَ اُذْکُرُوا اللّٰہَ یَذْکُرْکُمْ وَادْعُوْہُ یَسْتَجِبْ لَکُمْ وَلَذِکْرُ اللّٰہِ اَکْبَرُ۔

(தமிழாக்கம்: மவ்லவி அத்தாவுல் முஃக்னீ)